திருநெல்வேலி
செவ்வாய் ● ஏப்ரல் 9 2019
www.dinamalarnellai.com
தினமலர்
நெல்லை




பாளை., சாரதா கல்லூரியில் சமஸ்கிருதம் பாடத்தில் தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு, நெல்லை பல்கலை., பதிவாளர் சந்தோஷ் பாபு சான்றிதழ் வழங்கினார்.

# சமஸ்கிருத சான்றிதழ் வழங்கும் விழா

திருநெல்வேலி, ஏப். 9—

பாளை., சாரதா கல்லூரியில் சமஸ்கிருதம் பட்டய படிப்பு சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

பாளை., சாரதா கல்லூரியில் மத்திய அரசின் சமஸ்கிருதம் பட்டய வகுப்பிற்கான சான்றிதழ் விழா மற்றும் நிறைவு விழா நடந்தது. முதல்வர் மலர்விழி வரவேற்றார். செயலர் யதீஸ்வரி சரவணபவபிரியா அம்பா ஆசி வழங்கினார். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை., பதிவாளர் சந்தோஷ் பாபு மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி பேசினார். கல்வி ஆலோசகர் சந்திரசேகரன், பேராசிரியைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். சமஸ்கிருத துறை உதவி பேராசிரியை முத்துசெல்வி நன்றி கூறினார்.